# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2003, ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 4.75** **தபாற் செலவு: ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ.- 48/2003
4487

## 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :- 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "2003, யூன் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2003, ஓகத்து 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றெனக் கொள்ளப்படவேண்டிய வெளிப்படுத்துகையொன்றை 2003, ஓகத்து 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யலாம்"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

2 – H 019144 – 1,400 (2003/07)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003, ஓகத்து 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*